1993 ஏப்ரல் 8]

பட்டிருக்கிறது. 1992—93-ல் 280 ஆக உயர்ந்திருக்கிறது 280 கோடியைக் காட்டிலும் அதிகமாக சாலை மேம்பாட்டிற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன வரி மூலம் வருகின்ற வருமானம் முழுவதையும் ரோடு பராமரிப்புக்குச் செலவழிக்க வேண்டுமென்று குறிப்பிடும் போது, மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகர் கணவன் மனைவி உறவைப் பற்றி குறிப்பிட்டார்கள். கணவன் சம்பாதிக்கின்ற முழு வருமானமும், மனைவிக்கே போய் சேருகின்ற நிலை இருக்கின்றதா அல்லது வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுகின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவன் சம்பாதிக்கின்ற அனைத்தும் மனைவிக்கே தான் சேருகிறது. மனைவி என்ன யோசனையை சொல்கின்றாரோ அந்த யோசனைகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே தான் இந்த அரசைப் பொறுத்த வரையிலும் 280 கோடி இந்த ஆண்டு வருமானம் என்று சொன்னால் 280 கோடி ரூபாய்க்கு மேலும் நெடுஞ்சாலைத் துறையில் மற்றும் இருக்கின்ற சாலைப் பராமரிப்பிற்காக, உள்ளாட்சித் துறை, மாநகராட்சி, நகராட்சிகளுக்காக மேம்பாட்டிற்காக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 287,, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

287—

பரமக்குடி எமனேஸ்வரத்திலுள்ள கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள்.

*10878—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —:

(அ) இராமநாதபுரம் மாவட்ட பரமக்குடி எமனேஸ்வரத்தில் உள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் தள்ளுபடி நிலுவைத் தொகை எவ்வளவு?

[1993 ஏப்ரல் 8

(ஆ) இது எந்த ஆண்டு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி எமனேஸ்வரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தள்ளுபடி நிலுவைத் தொகை டிசம்பர் 1992 வரையில் 53.56 இலட்சம்.

(ஆ) அதில் 31—3—1993 வரையிலும் 11.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மீதமுள்ள தள்ளுபடி மானியம் வழங்கப்படுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-30.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு 100 நாட்களுக்குத் தள்ளுபடித் தொகை வழங்குகிறது. இதில் மத்திய அரசு 50 விழுக்காடும், மாநில அரசு 50 விழுக்காடும் கொடுக்கிறது. எனினும் நெசவாளர்கள், 90—91 ஆம் ஆண்டு வரை தள்ளுபடித் தொகை சங்கங்களுக்கு வந்துவிட்டது, 1991—92, 1992—93 ஆகிய ஆண்டுகளுக்கான தள்ளுபடித் தொகைதான் இன்னும் வரவில்லை என்று கூறினார்கள். ஓராண்டுக்கும் மேலாக தள்ளுபடித்தொகை நிலுவையில் உள்ளதால் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் வட்டித் தொகையாக கிட்டத்தட்ட 10இலட்சத்திற்கு மேல் செலவாகிறது. இவ்வாறு வட்டியாகச் செலவிடுகிற தொகை அந்தச் சங்கங்களுக்கு வருகிற இலாபத்தைப் பாதிக்கிறது. வருடந்தோறும் மத்திய அரசு ரிபேட் தொகை வழங்குகிறது. அந்தத் தொகையை ஒரே ஒரு இன்ஸ்டால்மென்ட் ஆக அதாவது பிப்ரவரி மாதத்திலேயேதான் வழங்குகிறது. இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதால் சங்கங்களுக்கு வட்டி நஷ்டம் ஏற்படுவதால் காலதாமதமின்றி உடனுக்குடன் ரிபேட் தொகை அவர்களுக்குக் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு 50 விழுக்காடு தருகிறது என்ற கருத்தை எடுத்துரைத்தார்கள். இது முற்றிலும் தவறான கருத்தாகும். ஏற்கெனவே மத்திய அரசு 50 விழுக்காடும், மாநில அரசு 50 விழுக்காடும் மானியமாகத் தந்து கொண்டிருந்ததில்

1993 ஏப்ரல் 8]

அதாவது மொத்தத் தொகையில் 75 சதவீதம் மானியத் தொகையாகவும் 25 சதவீதம் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. ஆனால் நம்முடைய தாயுள்ளம் கொண்ட தலைவி, புரட்சித் தலைவி ஆட்சிப்பீடத்திற்கு வந்ததற்குப் பிறகு அவர்கள் தந்தாலும் தராவிட்டாலும் மானியத்திற்காக தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று தாயுள்ளத்துடன் நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே 36 கோடியாக இருந்த இடத்தில் 42 கோடியாக வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மானியத்தைச் சரிகட்டியிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்தது 63 கோடி. அந்த 36 கோடியில் 75 சதவீதம் 27கோடி. அந்த 27 கோடியில் பாதி 13 கோடியே 50 இலட்சம். அதுதான் மத்திய அரசு தந்துகொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையிலும் 40.86 கோடி மானியமாக வழங்கபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த குறிப்புகளைத் தருவார்களானால் அது குறித்து அதிகாரிகளை அழைத்து நடவடிக்கை மேற்கொண்டு அந்த நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநில அரசு 50 விழுக்காடு கொடுப்பதுபோல் மத்திய அரசு கொடுக்கவில்லை என்று கோடிட்டுக்காட்டினார்கள் 1990—91 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 22 1/2 கோடி ரூபாய் கைத்தறி மானியத்திற்காக கொடுத்திருக்கிறார்கள். அதில் 11.5 கோடி மாநில அரசும் 11.5 கோடியை மத்திய அரசும் கொடுத்திருக்கிறது. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு 42 கோடியை இந்த நிதியாண்டில் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் மாநில அரசு ஒரு குறிப்பிட்ட சதவீதம்தான் கொடுக்கிறது என்று ஆணித்தரமாக கூறுகிறார்கள். மாநில அரசு கொடுக்கிற அளவுக்கு மேல் ரிபேட் தொகையை மத்திய அரசு கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்கிற தொகை 3 மாதத்திற்கு ஒரு முறை கொடுக்க வேண்டுமென்றும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தவும், அதேபோன்று கைத்தறி துணிகளுக்கு இப்போது விற்பனை அடிப்படையில் கொடுக்கிற தள்ளுபடித் தொகையை....

[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிகளுக்கு விற்பனை அடிப்படையில்கொடுக்கின்றதள்ளுபடித் தொகையை ஜனதா ரகத்திற்குக் கொடுப்பது போல் உற்பத்தி அடிப்படையில் கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கொடுத்துக்கொண்டிருந்த மானியத்தில், அதாவதுமொத்த தொகையில்75 சதவீதம் மானியமாகவும்—நன்றாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின்போது நான் தெளிவாகப் பேசி இருக்கிறேன். அதற்கு முன்னதாக 36 கோடி தந்துகொண்டிருந்த இடத்தில் புரட்சித்தலைவி அவர்கள் கடந்தநிதிநிலை அறிக்கையில் அதாவது நடப்பாண்டில் 42 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே 36 கோடி இருந்த நேரத்தில் 75 சதவீதம் மானியத்திற்கும் அந்த 75 சதவீதத்தில்தான் மத்திய அரசு 50 சதவீதம் அவர்களுடைய பங்குத் தொகையாகவும் நம்முடைய பங்குத் தொகை 50 சதவீதமும்போடுவதற்கு அவர்கள் ஆணை பிறப்பித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் பிறப்பித்த ஆணையையும் மீறி நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டும். விவசாயிகளுக்கு அடுத்த இடத்தில் இருக்கின்ற நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்கவேண்டும் என்பதற்காக தாயுள்ளத்தோடு நிதிநிலையில் எவ்வளவு நெருக்கடியாக இருந்தாலும், ரூ. 42 கோடிகள் வாரி வழங்கி இருக்கின்றார்கள். அவ்வகையில் ரூ. 40.86 கோடிகள் வழங்கியிருக்கிறார்கள். இதுவரையிலும் என்பதை நான் உங்களுக்கு மிகத் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில குறிப்புகளை மத்திய அரசு குறித்து கேட்டிருக்கிறார்கள். தற்போது அது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் எவ்வளவு மத்திய அரசு இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறது, இதுவரையிலும் எவ்வளவு ரிபேட் தொகை மத்திய அரசு நமக்குத்தர வேண்டும் என்ற குறிப்புகளை மாண்புமிகுஉறுப்பினர் அவர்களுக்கு நான் தருகிறேன் என்ற ஒரு உத்தரவாதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 288. திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.